17.09.2025 **OS.No. 118 / 2014**

**பி.வா.சா. 2 பெயர்: ஷேக் இஸ்மாயில் சாகிப் த/பெ. ஷேக் உஷைன்**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை: ( வாதிகள் தரப்பில் )**

என்னுடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 4 பேர். அவர்கள் பெயர் அகமது பாஷா, குலாப்ஜான், அமீர்ஜான் மற்றும் நான் ஆகியோர்கள் ஆவோம். வழக்கு சொத்து 02.11.1970 ல் எனது தகப்பனாருக்கும் எனது சகோதரர்கள் மற்றும் எனக்கும் ஏற்பட்ட பாகபிரிவினை படி எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது சகோதரர்களுக்குள் வேறு சில சொத்துக்கள் கூட்டாக ஒதுக்கி இருந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு ஒதுக்கப்பட்ட வேறு சில சொத்துக்களை பொருத்து வாதிகள் அஷினா, ஆயிஷா ஆகிய இருவரும் அசல் வழக்கு எண் 22/14 என வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 31.07.2023 ல் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை முறையே **வா.சா.ஆ. 16 மற்றும் 17** ஆகும். மேற்படி 02.11.1970 பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகளில் அவர் உயிருடன் உள்ள வரை சொத்துக்கள் அனுபவித்து கொள்ளவும் விற்பனை செய்து கொள்ளவும், சரத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அவ்வாறு விற்பனை செய்த பின்பு மீதமுள்ள சொத்துக்களை பொருத்து மட்டுமே நான்கு சகோதரர்களும் சமமாக அடைய வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு எனது தகப்பனார் உயிருடன் இருந்தபோது சில சொத்துக்களை விற்று உள்ளார்ள ன்றாலும் மீத முள்ள சொத்துக்கள் தான் வழக்கு சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் 10.01.1981 ல் இறந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த பின்பு நாங்கள் நான்கு சகோதர்களும் அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வது வழக்கம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நானும் எனது தகப்பனாரும் வழக்கு சொத்துக்களை பொருத்து எங்களுக்குபாகம் வேண்டாம் என்றும் மற்ற 3 சகோதரர்களும் அடைந்து கொள்ள வேண்டும் என்றும் 02.12.1980 ல் விடுதலை பத்திரம் வா.சா.ஆ.2 எழுதிக்கொடுத்தோம் என்றால் சரியல்ல. மேற்படி விடுதலை பத்திரத்தில் உள்ள 1 வது கையொப்பம் எனது தகப்பனார்பெயர் என்றால் அது போல்தான் உள்ளது. 2 வது ஆக உள்ள கையொப்பம் எனது என்றால் நான் போடவில்லை. மேற்படி வா.சா.ஆ.2 ல் உள்ள கையயொப்பம் என்னுடையது என்றாலும் நானும் எனது தகப்பனாரும் சேர்ந்து மற்ற சகோதருக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்து விட்டு தற்போது வழக்கிற்காக மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ.2 எழுதிக்கொடுத்து விட்டதால் வழக்கு சொத்துகளில்எனக்கு எவ்வித பங்குபாத்தியமும் இல்லை என்றால்

சரியல்ல. 1980ல் இருந்தே நான் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வரவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

ஒம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.